






# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 1 இதழ் 44 29.10.2025



ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:

# உள்ளே....

## படித்து பின்பற்ற வேண்டிய

## முத்துக்கள்

## உபதேசங்கள்



# முத்துக்கள்

*1.வைணவ நெறிகள்*

*நாம் அடைய வேண்டிய பொருள் பரப்ரும்மம். பரப்ரும்மத்தினுடைய ரூபம், வடிவழகு என்ன என்பது நமக்கு நன்றாகத் தெரிய வேண்டும்.அவனுடைய ஸ்வரூப, ரூப, குண விசேஷங்களைப் புரிந்து கொள்ள வேண்டும்.

* பரப்ரும்மத்தை அடைய வேண்டிய ஆத்ம ஸ்வருபத்தையும் அதாவது நாம் யார் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

* அவனை அடைய வேண்டிய வழி எது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

* அவனை அடைந்த பிறகு ஏற்படக்கூடிய பலன் என்ன என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

* அவனை அடையவிடாமல் தடுக்கும் தடைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

** இந்த ஐந்து விஷயங்களின்(அர்த்த பஞ்சகம்] மேல்தான் வேதமே நிற்கிறது.

*************************************************************

2. முடிவில்லதோர் எழில் என்று அவனுடைய எழிலுக்கு முடிவில்லாததைப் திருப்பாணாழ்வார் அமலனாதிபிரான் என்ற திவ்ய பிரபந்தத்தில் பாடியுள்ளார்.

கோலமா மணி ஆரமும் முத்துத் தாமும் முடிவில்லதோர் எழில் **

அவன் எழிலுக்கும் முடிவில்லை, அவன் குணத்துக்கும் முடிவில்லை, ரூபத்துக்கும் முடிவில்லை. எதை எடுத்து கொண்டாலும் முடிவே கிடையாது அவனிடத்திலே.

நம் ஆழ்வார் ஆச்சாரியர்கள் சௌசீல்யம் என்பதே பகவானின் குணம் என்று எழுதி இருக்கிறார்கள்.உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்று பாராமல் சகலரிடத்திலும் கலந்து நிற்றல்.தன் உயர்த்தி பார்பதில்லை இறைவன். அதுவே சௌசீல்யம்.

**********************************************************

3. ஜ்வலதே! ஜ்வலதே! ஜ்வலதே! என்பது அவன் மந்திரம். ஆயிரம் கோடி சூரியர்கள் ஒரு சேர உதித்தால் அது என்ன பிரகாசமாக தேஜஸோடு இருக்குமோ அதை காட்டிலும் மேம்பட்டவன் பரமாத்மா.

ஜோதியிலே பெரிய ஜோதி அந்த பரமாத்மா.

அதனால்தான் முண்டகோபநிஷத் அவனுடைய ஒளியினால் ஒளியே ஒளி பெறுகின்றது என்று சொல்கிறது.

முண்டகோபநிஷத் குறிப்பது கோயில்களில் இருக்கும் அர்ச்சாமூர்த்தியை, இதை சற்றே ஆராயந்து பார்த்தால் நம் தூப்புல் திவ்ய தேசத்தில் நின்று அருள் பொழியும் நம் தீபப்பிரகாச பெருமாளை குறிக்கும்.

ஜோதியிலே பெரிய ஜோதி நம் விளக்கொளி பெருமாள்...

(1,2,3 வைகுண்டவாசி ஸ்ரீ உ.வே. முக்கூர் லக்ஷ்மி நரசிம்ஹாச்சாரியாரின் பெட்டகத்திலிருந்து)

*****************************************************

எம்பெருமான் ஒருவனே பரதத்வம். அவன் ஒருவனையே த்யானம் செய்யவேண்டும். அவன் திருவடிகளிலேயே சரணாகதி செய்து, அவனுக்கே குற்றமற்ற கைங்கர்யங்கள் செய்ய வேண்டும். இதைத் தவிர மற்ற காம்ய கர்மங்களில் ஈடுபடுதல் நம்மை உஜ்ஜீவிக்கும் நன்மை பயக்காது. இதனைக் கருத்தில் கொண்டு ஸ்ரீ குலசேகரப் பெருமாள் செய்யாதன செய்யேன் என்றார். (முகுந்த மாலை போல)



## மூவேழுநரகங்களும் ஈரேழுஉலகங்களும்

வி.பு. (அம்சம் 2, அத். 6): பூமியின் கீழே அதலம், விதலம், ஸுதலம், தலாதலம், மஹாதலம், ரஸாதலம், பாதாளம் என்ற ஏழு உலகங்கள் இருக்கின்றன. இவைகளின் கீழே பாபிகள் வதைக்கப்படும் பல நரகங்கள் உள்ளன. அவைகளில் முக்கிய 21 நரகங்களாவன: 1- ரௌரவம், 2-ஸுகரம் 3-ரோதம், 4- தாலம், 5- விசஸநம், 6-மஹாஜ்வாலம், 7- தப்தகும்பம், 8- லவணம், 9 விலோகிதம், ருதிராம்பம், 11- வைதரணி, 12 - கிருமிசம், 13 போஜநம், 14-அஸிபத்ரவநம், 15-கிருஷ்ணம், 16-லாலா பக்ஷம், 17 - பூயவஹம், 18-அக்நிஜ்வாலம், 19- அதச்சிரம், 20-ஸம்தம்ஸம், 21-காலஸூத்ரம் முதலியவை. இன்னும் பல கொடிய நரகங்களும் எமனுடைய அதிகாரத்தில் உள்ளன. இந்த நரகங்களுக்குக் கீழே தமஸ்ஸும், அதற்குக் கீழேஅண்ட கடாஹமும் (= அண்ட கோளத்தின் ஓடு) உள்ளன. பூமிக்கு மேலே புவர்லோகம், ஸுவர்லோகம், மஹர்லோகம் ஜனோ லோகம், தபோலோகம், ஸத்யலோகம் ஆகிய உலகங்கள் உள்ளன. அதற்கும் மேலே தமஸ்ஸு, கர்த்தோதகம், அண்ட கடாஹம் ஆகியவை உள்ளன.

இந்த அண்டம் 7 ஆவரணங்களால் சூழப்பட்டுள்ளது இவ்விதமான அண்டங்கள் கணக்கில்லாமல் இருக்கின்றன. ஜலத்தில் குமிழிகள் போலே ஒரே காலத்தில் அவை ஈசுவரானாலே உண்டு பண்ணப்படுகின்றன.

****************************************************

## துல்ய ந்யாயம்

ஒன்றைவிட்டுப் பிரியாது இணைந்திருப்பவைகளுள் ஒன்று இருப்பின் மற்றொன்றும் இருப்பது இயல்பு. இதுவே துல்யந்யாயம். ஜீவனிடம் பரமனைக் குறித்து சேஷத்வம், பாரதந்த்ரியம்,நியாம் யத்வம் முதலியவை இயல்பாக உள்ளவை. இவற்றுள் ஒன்று இருந்தாலும் மற்றவைகளும் இருக்கும்.

## பகவத் க்ஷேத்ரங்களின் வகைகள்

அர்ச்சாரூபியாக எம்பெருமான் எழுந்தருளியுள்ள கோவில்கள் ஸ்வயம் - வ்யக்த்தம், ஸைத்தம் (= திவ்யம்), ஆர்ஷம் மாநுஷம், வைஷ்ணவம் என்று ஐந்து வகைப்படும். ஸ்ரீரங்கம், திருவேங்கடம், நைமிசாரணியம், வானமாமலை, சாளகிராமம் ஸ்ரீ முஷ்ணம், புஷ்கரம், ஜகந்நாதபுரி என்பன ஸ்வயம் வ்யக்த்த க்ஷேத்ரங்கள் (= தானாகவே எம்பெருமான் விரும்பித் தோன்றிய இடங்கள்). தேவர்களின் தவத்திற்கு இரங்கி அருள்புரிய எம்பெருமான் தோன்றிய இடங்கள் ஸைத்தம் அல்லது திவ்யம் எனப்படும் (உ - ம், காஞ்சீ). ரிஷிகளுடைய தவத்திற்கு இரங்கி அவர்களுக்கு ப்ரத்யக்ஷமான தலங்கள் ஆர்ஷம் எனப்படும் (உ-ம் திருவிண்ணகர் (= உப்பிலி அப்பன் கோவில்), திருஅல்லிக்கேணி, திருநறையூர் முதலியன]. பக்தர்களான அரசர்கள், பிரபுக்கள் கட்டும் கோயில்கள் மாநுஷம் எனப்படும். பரமைகாந்திகள் தங்களுடைய வழிபாட்டிற்கு வைஷ்ணவும் எனப்படும். ஏற்படுத்திய கோவில்கள் வைஷ்ணவும் எனப்படும்.

**************************************************



